கற்கண்டு

# இயல் ஒன்று

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

**நினைவு கூர்க**

தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும். சார்பெழுத்துகளில் ஒன்றான குற்றியலுகரம் பற்றி இனிக் காண்போம்.

## குற்றியலுகரம்

குழந்தை, வகுப்பு, பாக்கு ஆகிய சொற்களைச் சொல்லிப் பாருங்கள். மூன்று சொற்களிலும் 'கு' என்னும் எழுத்தை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதை உணரலாம். அவ்வெழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் வரும்பொழுது முழுமையாக ஒலிக்கிறது. சொல்லின் இறுதியில் வரும்பொழுது ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கிறது. கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.

(எ.கா.) காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும். வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும். இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

(எ.கா.) புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு



### தெரிந்து தெளிவோம்

தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.

- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்', 'காரம்', 'கான்' (எ.கா.) அகரம், மகரம், மகாரம், மஃகான்
- ஐ, ஔ எழுத்துகளைக் குறிக்க 'கான்' (எ.கா.) ஐகான், ஔகான்
- நெடில் எழுத்துகளைக் குறிக்க 'காரம்' (எ.கா.) ஆகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்
- ஆய்த எழுத்தைக் குறிக்க 'கேனம்' (எ.கா.) அஃகேனம்



7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 17 22/01/2025 17:35:16